1980 பிப்ரவரி 4] [டாக்டர் கே, சமரசம்]

தெரியாதவர்கள். அவர்கள் பார்த்திராதவர்கள். அந்த வகையில் யார் அனாதையாக்கப்பட்டார்களோ அவர்களுக்கு எல்லாம் புகலிடம் கொடுத்து, மறுவாழ்வு கொடுத்து அண்ணாவின் கொள்கையை இந்த நாட்டில் நிலை நாட்டுவதற்குக் காரணமாக இருந்தவர் புரட்சித் தலைவர் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இன்னொன்றையும் சொன்னார்கள். எங்களை ராஜினாமா செய்யச் சொன்னார்கள் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அவர்கள் வாக்காளர் பேரணி நடத்தி, எலுமிச்சம்பழத்தைக் கையில் கொடுத்து "ரைட் டு ரீ கால்'' என்ற நிலையைக் கொண்டு வந்தார்கள். நாங்கள் அதை மறுக்கவில்லை. எப்போது சொன்னோம் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்து புரட்சித் தலைவர் அவர்களைத் தூக்கி எறிந்த பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று நாட்டிலே மாற்றப்பட்ட பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாற்றங்காலாக இருந்த எம்.ஜி.ஆர். மன்றங்கள் எம்.ஜி.ஆரின் பாசறையாக மாறிவிட்ட பிறகு மக்கள் வெகுண்டு எழுந்து கொண்டார்கள். அப்போதுதான் இந்த நடவடிக்கை எடுத்தோம். அன்று கலைஞர் என்ன சொன்னார் அது கழகத்தின் தலை, பேராசிரியர் கண், நாவலர் இதயம், சாதிக் கால், நாஞ்சிலார் வாய், இடுப்பு சத்தியவாணிமுத்து. . . . .

5. அறிவிப்பு.

பூடான் தேசிய அசெம்பிளியிலிருந்து வந்துள்ள பாராளு மன்றக் குழுவிற்கு வரவேற்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பூட்டான் தேசத்துப் பாராளுமன்றக்குழு ஒன்று இப்பேரவையை காண்பதற்காக வந்து பேரவைத் தலைவர் மாடத்தில் அமர்ந்து இருக்கிறார்கள். அவர்களை இப் பேரவையின் சார்பில் வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

A Parliamentary delegation from the National Assembly of Bhutan has come to witness the proceedings of the Assembly. They are in the Speaker's Gallery. On behalf of this House I extend them a warm welcome.